திரு. சி. கே. சின்னராஜி கவுண்டர் : தலைவரவர்களே, கோயில்களில் வரும் அதிக வருமானத்தை, அதாவது அதிக வருமானம் வரும் கோயில்களில் இருக்கும் மீதிப் பணத்தை கல்வி ஸ்தாபனத்திற்கு எடுத்துக் கொள்ளலாமா, அதற்கு விதி இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : அதைத்தான் முதலிலேயே சொன்னேன், எடுத்துக்கொள்ளலாம் என்று.

Diversion can be made only from surplus funds of temples for purposes mentioned under section 66 of the Act. என்றிருக்கிறது. ஆகவே, மிச்சமிருக்கும் பணத்தைக் கொண்டு இப்படிப்பட்ட நல்ல காரியங்களைச் செய்யலாம் என்றுதான் சட்டத்தில் இருக்கிறது. அதைத்தான் செய்து கொண்டு வருகிறோம்.

Archakas of Sri Kapaleeswarar Temple.

* 312 Q.—THIRU K. SAHADEVA KANDER : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether the present archakas of Sri Kapaleeswarar temple, Mylapore, Madras have been permitted to take remunerative jobs outside under (i) Government and (ii) private bodies ; and

(*b*) if so, the details of the archakas permitted to do so?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : இல்லை.

Seminar conducted by Madras Management Association.

* 313 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether the State Government representatives participated in the seminar of the recommendation of the National Commission on Labour conducted by the Madras Management Association about 26th April 1970 ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

Award on Plantation Labour.

* 314 Q —THIRU N. KASIRAMAN : Will the Hon. the Minister for Labour be pleased to state--

(*a*) whether an award was given by the Labour Commissioner in the year 1969 in the dispute between the workers and the plantation owners ; and

(*a*) whether an award was given by th Labour Commissioner owns quite a large area of rubber plantation, etc. ?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : (அ) இல்லை

(இ) இவ்வினா எழவில்லை.

திரு. கே. விநாயகம் : சார், இந்த இரு சாரருக்கும் ஏற்பட்டிருக்கிற சச்சரவுகளைப்பற்றி ஏதாவது மனு அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா ? அதைப் பற்றி பரிசீலிக்க, அவர்களுக்குச் சேரவேண்டிய சலுகைகளைத் தர ஆராய்ச்சி செய்ய அரசு முன்வந்ததா ?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : மூலக்கேள்வி, தோட்டத் தொழிலாளர்களுக்காக ஏதாவது கமிஷனர் அவார்ட் வழங்கினாரா என்பது பற்றியது, அப்படி இல்லை. ஆனால் 1968, 1969, 1970-ஆம் ஆண்டிற்கான போனஸ் தரப்படவில்லை. அதைப்பற்றி ஒரு உடன்பாடு காணவேண்டுமென்று அந்தப் பிரச்சினை எழுப்பப்பட்டது. உடன்பாடு காணப்பட்டு; செட்டில்மெண்ட் உடன்பாட்டில் கையெழுத்து போடப்பட்டிருக்கிறது. அந்த முறையிலே சுமுகமான தீர்வு காணப்பட்டிருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்திலே 23 தோட்டங்களுக்கு அம்மாதிரி உடன்பாடு சென்ற ஆண்டு காணப்பட்டிருக்கிறது.

தென்னை ஆராய்ச்சி நிலையம்.

294 வினா.—**திரு. என். கிட்டப்பா** : மாண்புமிகு வேளாண்மை, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னை ஆராய்ச்சி நிலையம் ஏதேனும் நமது நாட்டில் செயல்பட்டு வருகிறதா ?

(இ) இல்லையெனில், இனியேனும் செயல்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) தற்பொழுது மண்டல தென்னை ஆராய்ச்சி நிலையம் ஒன்று வேப்பங்குளம் (தஞ்சாவூர் மாவட்டம்) என்னும் இடத்தில் செயல்பட்டு வருகிறது.

(இ) மேற்கூறிய தென்னை ஆராய்ச்சி நிலையத் (வேப்பங்குளம்) தைத் தவிர இராமநாதபுரம் மாவட்டத்தில் புதிதாக தென்னை ஆராய்ச்சி நிலையம் ஒன்று ஆரம்பிக்க அரசு அனுமதி அளித்துள்ளது. இவ்வாராய்ச்சி நிலையம் விரைவில் தகுந்த இடம் கிடைத்தவுடன் செயல்படவுள்ளது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, இம்மாதிரியான ஆராய்ச்சியின் காரணமாக தென்னையை மேலும் அபிவிருத்தி செய்ய அரசு மேற்கொண்டிருக்கும் நடவடிக்கையை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : ஆராய்ச்சி நிலையம் தேவை என்பதை உணர்ந்து ஏற்கெனவே, 1958-ஆம் ஆண்டு, வேப்பங்குளம் என்னுமிடத்தில் ஒரு நிலையம் நிறுவப்பட்டிருக்கிறது. மேலும் இப்படிப்பட்ட நிலையம் அவசியம் என்பதை உணர்ந்து 1970-71-ஆம் ஆண்டில் இன்னொரு நிலையம் இராமநாதபுரம் மாவட்டத்தில் துவக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. தகுந்த இடம் கிடைத்தபின்னர் அது செயல்படத் துவங்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இதைத்தவிர வேறு வேறு புதிய நிலையங்களை நிறுவ தற்சமயம் செயற்குறிப்பு எதுவுமில்லை.

திரு. நா. வீராசாமி : பேரவைத் தலைவரவர்களே, இந்த ஆராய்ச்சி நிலையம் அமைக்கப்படுவதை வரவேற்கின்ற அதேநேரத்திலே, இந்த அரசு வந்ததற்குப் பின்னால் ஐ. ஆர். 8, குட்டை வாழை போன்ற இந்தப் பயிர்